# அவள் வேதாந்தம்

கடையில் நூறு புடவைகளை எடுத்துப் புரட்டிப் பார்த்து விட்டுப் பிறகு, ஒன்று வாங்கா விட்டால் நன்றாய் இராதே என்று எண்ணி ஒரு புடவையை வாங்கிக் கொண்டு திரும்பினேன். அங்கே கடையில் மின்சார விளக்கில் பளபள வென்று மின்னிய அந்தப் புடவை மறுநாள் சூரிய வெளிச்சத்தில் பார்த்தபோது நன்றாகவே இல்லை.

''இந்தக் கலர்தானா உனக்குக் கடைசியிலே பிடித்தது? கலர் பார்க்கச் சகிக்கவில்லையே'' என்று அம்மா தலையில் அடித்துக் கொண்டாள். என் மனம் அதனால் துக்கத்தில் ஆழ்ந்தது. 'கேவலம், ஒரு புடவை சரியாக அமையக்கூட அதிர்ஷ்டம் வேண்டியிருக்கிறதே'' என்று வெம்பிய மனத் துடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தேன்.

திரும்பிப் பார்க்கும் பொழுதெல்லாம், கடையிலிருந்து வாங்கி வந்த புதுப் புடவை பல்லிளித்துக் கொண்டு மேஜை மீது உட்கார்ந்திருந்தது. அதைத் திருப்பிக் கொடுக்கவும் வழி யில்லை. கட்டிக் கொள்ளவும் மனம் இல்லை. பணத்தைக் கொட்டி வேண்டாத புடவையை வாங்கின ஒரு பெண்ணி னுடைய மனம் எப்படிப்பட்ட துக்கத்தில் ஆழ்ந்து விடும் என்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

நான் இவ்வாறு மனோ வேதனைப்பட்டுக் கொண்டு இருந்தபோது எங்கள் வீட்டில் வேலை செய்யும் சின்னரங்கம் உள்ளே வந்தாள். அவளுடைய சிரித்த முகத்தைப் பார்த்ததும் எனக்குப் பொறாமையாய் இருந்தது. நான் அவளை, ''சின்ன ரங்கம், நீ எப்பவாவது அழுதிருக்காயா?'' என்று கேட்டேன்.



''ஏனம்மா அப்படி கேக்கறீங்க?'' என்று அவள் தன் வெள்ளைப் பல் வரிசையைக் காட்டினாள்.

''இல்லை எப்போ பார்த்தாலும் சிரித்த முகமாகவே இருக்காயே, கவலையே தோணவில்லையே. அதுதான் எனக்கு ஆச்சரியமாய் இருக்கு'' என்றேன்.

''என்னம்மா அப்படி சொல்கிறீங்க? கவலையும் குறையும் இல்லாத மனுசாள் உலகத்திலே இருக்காங்களா? நிசத்தைச் சொல்லப் போனா என் புருசன் என்னைத் திரும்பிப் பார்க்காமேகூட போய்ட்டாரு. அதுக்காக நான் இடிஞ்சி போயிடலே அம்மா'' என்று வறட்டுச் சிரிப்பு சிரித்தாள் அவள்.

''நிஜமாகவா? அப்போ உன் புருஷன் இங்கில்லையா'' என்று நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

''அது ஒரு பெரிய கதை அம்மா'' என்று தரையில் உட்கார்ந்து கொண்டு சின்னரங்கம் ஆரம்பித்தாள்.

அவள் கணவன் ஆறுமுகம். அவனை அவள் சின்னஞ் சிறு பிராயத்திலிருந்து அறிவாள். குடியானத் தெருவில் எதிர் வீட்டுப் பழனியின் மகன் அவன். மாடு மேய்க்கப் பக்கத்துக் காட்டுப் பக்கம் போனால் சின்னரங்கமும் கூடையை எடுத்துக் கொண்டு சுள்ளி பொறுக்கி வர அவன் கூடக் கிளம்பி விடுவாள்.

நாவல் மரத்தின் மேல் ஏறிக் கொண்டு அவன் பழங்களைப் பறித்துக் கீழே போட அவள் ஓடியோடிப் பொறுக்கிக் கூடையில் சேர்த்து விடுவாள். பிறகு மாடுகளை மேய்க்க விட்டு விட்டுச் சின்ன வாய்க்கால் கரையோரம் மர நிழலில் உட்கார்ந்து கொண்டு இருவரும் அந்தப் பழங்களைத் தின்பார்கள்.

அவனுக்குப் பேச்சாகவே பேசத் தெரியாது. சதா ஏதாவது கூத்துப் பாட்டுக்களையே பாடிக் கொண்டிருப்பான்.

ஊரிலே மாசி மாதம் காம தகனம் ஆரம்பித்தால் ஆறுமுகம் அந்த மாதமெல்லாம் 'ரதியே ரதிக்கிளியே' என்று பாடிப் பாடி அவள் காதைப் புளிக்கடித்து விடுவான்.

ஊரில் எங்கேயாவது டிராமா போட்டு விட்டால் போதும். அன்று முழுவதும் மாடு மேய்க்கும் இடத்தில் அவனே ராஜபார்ட், ஸ்திரீபார்ட், காமெடியன் எல்லா பாட்டுக்களையும் தாங்கி நடிக்க ஆரம்பித்து விடுவான். நடிப்பு பாட்டு என்றால் அவனுக்கு அவ்வளவு பிரேமை!

ஆறுமுகத்திற்குச் சுபாவத்தில் கொஞ்சம் முரட்டுத் தனமும் பிடிவாதமும் உண்டு. அவனுக்கு வயது பதினெட்டு இருக்கும். அப்பொழுது ஒரு தடவை அவனுடைய அப்பன் அடுத்த ஊர் சந்தையில் மாடு வாங்கிவர பணம் கொடுத்து அனுப்பினான். அதைச் செலவழித்து அங்கே போட்டிருந்த ஒரு நாடகத்தைப் பார்த்துவிட்டு மறுநாள்தான் வீடு திரும்பி னான். பணத்தைச் செலவழித்ததற்கு அப்பன் கோபித்துக் கொண்ட பொழுது அவன் இரண்டு நாள் வீட்டிற்கே வரவில்லை. பிறகு அவனைச் சமாதானம் பண்ணி அழைத்துக் கொண்டுவர பட்டபாடு தெய்வமறிந்து போய்விட்டது.

பிள்ளைக்கு ஒரு பெண்ணைப் பிடித்துக் கட்டி வைத்தால் திருந்திவிடுவான் என்று எண்ணி பழனி பக்கத்து வீட்டு சின்ன ரங்கத்தை ஆறுமுகத்துக்குக் கல்யாணம் பண்ணி வைத்தான். சின்னரங்கமும் ஆறுமுகமும் ஒருவர்மேல் ஒருவர் சின்ன வயதிலிருந்தே பிரியமாயிருந்ததால் அந்தக் கல்யாணம் இருவர் மனதையும் குதூகலிக்க வைத்தது.

அதற்குப்பின் இரண்டு வருஷங்களும் இன்பமாகவே கழிந்தன. ஆறுமுகம் அவளிடம் அன்பை அள்ளி வீசினான். அந்த இன்ப நாட்களை எப்படி மறக்க முடியும்?

ஆறுமுகம் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானான். அந்த வருஷம் அவனுடைய தந்தை பழனி இறந்து விட்டதால்



குடும்பம் நடத்த வேண்டிய பொறுப்பை ஆறுமுகம் ஏற்க வேண்டியதாயிற்று. சுபாவத்தில் சுகவாசியான அவனுக்கு வயலில் கஷ்டப்பட்டு வேலை செய்யப் பிடிக்கவில்லை. ஒரு நாள் வேலை செய்தால் ஒன்பது நாள் வீட்டுத் திண்ணையை விட்டு அசைய மாட்டான்.

சின்னரங்கத்திற்கும் அவனுக்கும் அதனால் அடிக்கடி மனஸ்தாபம் ஏற்படும். "சும்மா உட்கார்ந்திருந்தால் சோறு ஆகாயத்திலிருந்து விழுமா?" என்று அவள் ஆறுமுகத்தைக் கேட்டால் அவன் அதற்கு 'வயலில் போய் வேர்வை வழிய, முதுகொடிய யார் வேலை செய்வாங்க? நல்ல டிராமா கம்பெனியில் சேர்ந்து விட்டு ஆட்டம் ஆடி ஆயிரம் ஆயிரமா சொகுசா சம்பாரிக்கரதை விட்டு விட்டு இதென்ன கழுதை வேலை?' என்று சண்டை போடுவான்.

சின்னரங்கத்திற்கு அவனுடைய மனப்போக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. இப்படி உதவாக்கரை புருஷன் தனக்கு வாய்த்தானே என்று அவள் தன் மனத்திற் குள்ளேயே வருத்தமடைந்தாள்.

அந்த வருஷத்தைப் போன்ற கஷ்டமான காலத்தை அவள் தன் ஜன்மத்தில் பார்த்ததேயில்லை. கைக்குழந்தை சீக்காகப் படுத்துக் கொண்டு விட்டதால், சின்னரங்கம் வயல் வெளிக்கு போய் வேலை செய்ய முடியவில்லை. கையில் ஒரு காசுகூட இல்லாமல் தம்பதிகள் கஷ்டப்பட்டார்கள்.

"வயலில் வேலை பார்க்கக்கூடாதா. புதுசா ஒரு மில்லு திறந்திருக்காங்களாம். அங்கே நிறைய வேலையாளு பொறுக் கராங்களாம். குடியானத் தெருவிலே இதே பேச்சா இருக்கே" என்று இரவு தன் கணவனிடம் வற்புறுத்திச் சொன்னாள்.

மறுநாள் வேலை தேடும் பொருட்டுப் போன ஆறுமுகம் இருட்டி வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை. சின்ன ரங்கம் அதற்காகக் கவலைப்பட்டு மனம் நொந்து கொஞ்ச

நஞ்சமல்ல. 'அவனை ஏன் வேலைக்குப் போகச் சொல்லி நச்சரித்தோம்' என்று வருந்தினாள்.

மறுநாள் வீடு வந்த ஆறுமுகம் உற்சாகமாகக் காணப் பட்டான். ''ஓ பொண்ணு எனக்கொரு வேலை கிடைச்சிடுச்சு. நீ கவலைப்பட வேண்டாம்'' என்றான். என்ன வேலை என்று சின்னரங்கம் சந்தோஷத்துடன் கேட்டாள். பக்கத்து டவுனிலே சிங்காரம் கம்பெனி என்ற ஒரு டிராமா கம்பெனியிலே ஒரு ஆளு ஓடி விட்டானாம். அவனுக்குப் பதிலாக ஆளு தேவை யின்னு தேடிக் கிட்டு இருந்தாங்க. நான் போய்ப் பார்த்தேன். எனக்குக் கொஞ்சம் அந்தப் பாகமெல்லாம் சொல்லிக் கொடுத்து சேர்த்துக்கிறேன்னுட்டாங்க. மாசம் பத்து ரூபா கையிலே, சாப்பாடும் கிடைக்கும். ஆனால் நான் இந்த ஊரிலேயே இருக்க முடியாது. அடிக்கடி ஊர் சுத்திக்கிட்டே யிருக்கணும்'' என்றான்.

''இந்த வேலையெல்லாம் வேணாம், நீங்க சும்மா வீட்டிலேயே குந்திக்கிட்டிருந்தால் போதும்'' என்றாள் சின்ன ரங்கம்.

''என் மனசிலே டிராமா கம்பெனியிலே சேரணும்னு ஆசை தெரியுமா? அந்த வேலையை விடமாட்டேன்'' என்று பிடிவாதமாகக் கூறி மறுநாளே அவன் போய் விட்டான்.

ஒரு மாதம் சென்றது. வீட்டிற்கு வாரம் ஒரு தடவைதான் வருவான். வந்தாலும் வாசலில் பாயை விரித்துக் கொண்டு தூங்கிக்கொண்டு இருப்பான். ஏதாவது பேசினாலும் தன்னுடைய டிராமா நடவடிக்கைகளைப் பற்றியே அதிகம் பேசுவான். சின்னரங்கத்திற்கு இதெல்லாம் வெறுப்பாக இருந்தது. ஒரு நிலையில்லாத வாழ்வு என்று மனத்திற்குள் ஏங்கினாள்.

ஒருநாள் அவன் வீடு வந்து சேர்ந்த பொழுது தனக்கு ஏதோ ஒரு பெரிய சமாசாரம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அவன் முகபாவத்திலிருந்து ஊகித்துக் கொண்டாள்.



''சின்னரங்கம், எங்க கம்பெனி இங்கே இருந்து தஞ்சாவூர்ப் பக்கம் போவுது. வர இரண்டு மாசமாகும்'' என்று கூறிவிட்டுக் கைச் செலவிற்கு ஒரு பத்து ரூபாயைக் கொடுத்தான்.

மூட்டையைக் கட்டிக்கொண்டு அவன் கிளம்பிய பொழுது சின்னரங்கத்திற்குத் துக்கம் தாங்க முடியவில்லை. ''வேலே கஷ்டமாய் இருந்தா வந்துடுங்க. நான் வேலை செய்து சம்பாதிக்கிறேன். சும்மா இங்கே குந்திக்கிட்டாவது சாப்பிடலாம். வெளியூர்லே போய்த் திண்டாட வேண்டாம்'' என்று சொன்னாள்.

''கவலைப்படாதே. ரெண்டு மாசத்திலே நல்ல வரும் படி கிடைச்சா உன்னை உடனே வந்து கூட்டிப் போறேன்'' என்று தைரியம் சொல்லிவிட்டுப் போனான்.

அன்று போனவன் இரண்டு மாதம் கழித்து ஒரு கடிதம் போட்டான். கம்பெனி கும்பகோணத்திலே இருப்பதாகவும் எழுதியிருந்தான்.

தன் தலைவிதியை நினைத்துக் கொண்டு கொஞ்ச நாள் அழுது கொண்டிருந்த சின்னரங்கம் மனதைத் தேற்றிக் கொண்டு தினப்படி கூலி வேலை செய்து தனது ஒரே பிள்ளையைக் காப்பாற்ற ஆரம்பித்தாள்.

நாளடைவில் ஆறுமுகத்தினிடமிருந்து கடிதம் வருவது நின்று போயிற்று. இரண்டு வருஷமாயிற்று. அவன் இருக் கிறானா என்று கூடச் சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது.

தன் சரீரத்தால் கஷ்டப்பட்டு வேலை செய்து மகனைப் போஷித்து அவனாவது உருப்பட வேண்டும் என்ற எண்ணத் துடன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தாள் சின்னரங்கம். பையனுக்கு ஏழு வயதிருக்கும். அவனும் அப்பாவைப் போலவே பிடிவாதமும் பொல்லாத்தனமும் உடையவனாய் வளர்ந்து வந்தான்.

திடீரென்று ஒரு சமயம் ஆறுமுகத்தின் பெயர் பல இடங்களில் அடிபட ஆரம்பித்தது. ஆறுமுகம் பெரிய நடிகன் என்று பெயர் வாங்கி விட்டான். அவன் கம்பெனி போட்ட டிராமாக்கள் எல்லாவற்றிற்கும் நல்ல வரும்படியாம்.

ஆறுமுகம் இப்போது பிரபல சினிமா நடிகனாகி விட்டான். தடுக்கி விழுந்த இடங்கள் எல்லாம் அவன்தான் கதாநாயகன். அன்று பக்கத்து டவுனில் உள்ள ஒரு சினிமாக் கொட்டகையில் ஒரே தடபுடல் பட்டது. 'வெள்ளித் திரையில் பிரபல நடிகனெனப் பெயர் பெற்ற ஆறுமுகம் நேரே சினிமாக் கொட்டகையில் ஆஜராகி அவரது அபிமானிகளுக்கு ஆனந்தமூட்டுவார்' என்று நோட்டீஸ்கள் அவர்கள் தெருவில் பறந்தன.

சின்னரங்கத்திற்கு அந்த ஆறுமுகம் தன் புருஷன் ஆறுமுகம்தானா அல்லது வேறு யாரோவாவென்று சிறிது சந்தேகம். போதாதற்கு மகன் வேறு பிடுங்கினான். எதற்கும் சினிமா கொட்டகையில் போய் பார்க்கலாமென்று தீர்மானித்தாள். பையனைக் கூட்டிக்கொண்டு போய்க் கையிலிருந்த பணத்திற்கு டிக்கட் வாங்கி உள்ளே நுழைந்தாள். உள்ளே எள் போட இடமில்லாத கூட்டம்.

அவள் படத்தைக் கூடச் சரியாகக் கவனிக்கவில்லை. ஆறுமுகம் வரப் போவதையே எதிர்பார்த்துக்கொண்டு இருந்தாள். கடைசியில் பலத்த கர கோஷத்தினிடையை ஆறுமுகம் மேடைமீது தோன்றினான். சின்னரங்கத்திற்கு அவனை அடையாளமே புரியவில்லை. அவன் முன்னைவிட நன்றாக ஊதிப் போயிருந்தான். காதுகளிலும் கை விரல் களிலும் ஒரே வைரம் மின்னியது. பத்து விரல்களிலும் பத்து மோதிரம், மீசை, சில்க் சட்டை சரிகை அங்கவஸ்திரத்துடன் காட்சியளித்தான். பிறகு ஏதோ இரண்டு பாட்டுக்கள் பாடினான். அதைக் கேட்டு சபையிலே பலத்த ஆரவாரம்.



சின்னரங்கம் அவனையே பல முறை முறைத்துப் பார்த்தாள். அவளுக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. அப் பொழுது அவளுக்கு ஒரு பயித்தியக்கார யோசனை தோன்றியது.

கூட்டம் கலைவதற்கு முன் வெளியே ஓடி வந்தாள். சினிமா கொட்டகையின் முன் ஒரு கார் புறப்படத் தயாராய் இருந்தது. பூமாலையைக் கையில் சுமந்த வண்ணம் சினிமா கம்பெனி மானேஜர் முதலிய பிரமுகர்கள் புடைசூழ நின்று கொண்டிருந்தார்கள். ஆறுமுகம் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டாளோ இல்லையோ சின்னரங்கத்திற்கு அவன் தன் புருஷன் ஆறுமுகமா, இல்லையா என்ற சந்தேகம் தோன்றிற்று. ஆனால் நாடகப் பியித்தியமுள்ள அவனாகத் தான் இருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டாள்.

''என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு?'' என்று அலறிக் கொண்டு அவன் காலடியில் விழுந்து விட்டாள். கூடி யிருந்தவர்களிடையே பெரிய பரபரப்பு ஏற்பட்டது. ''இந்தப் பிச்சைக்காரச் சனியன்களை இங்கே உள்ளே விட்டது யார்?'' என்று மானேஜர் கூக்குரலிட்டார்.

''மோகனா, இந்தப் பிச்சைக்காரிக்கு ஏதாவது சில்லரை இருந்தால் போடு'' என்று கூறிக் கொண்டு ஒரே பாய்ச்சலில் காரில் உட்கார்ந்து கொண்டான் ஆறுமுகம்.

''இந்தா இதை எடுத்துக்கோ'' என்று ஒரு பெண்ணின் குரல் காரின் உள்ளிருந்து வந்தது. மறு நிமிடம் டக்கென்று ஒரு வெள்ளி ரூபாய் சின்னரங்கத்தின் மடியில் விழுந்தது. பெரிய பிரபல சினிமா நடிகனின் மனைவி சின்னரங்கம் கேவலம் ஒரு பிச்சைக்காரியாகி விட்டாள். விதியின் விளையாட்டு மிகவும் விபரீதம். அவளால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடிய வில்லை. மனம் வெடிக்கும் போலிருந்தது. மகனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

மறுநாள் காலை விடிந்ததும் விடியாததுமாய் அவள் வீட்டு வாசலில் ஒரு மோட்டார் கார் வந்து நின்றது. சர்வாலங் கார ரூபியான பெண்மணியும், ஆறுமுகமும் இறங்கி உள்ளே வந்தார்கள். சின்னரங்கம் பேசச் சக்தியின்றி அவர்களைப் பார்த்த வண்ணம் பதுமை போல் நின்று விட்டாள்.

''சின்னரங்கம் உன்னை நேத்து அடையாளம் கண்டு கொண்டு விட்டேன். இருந்தாலும் நீ இப்படி அந்தச் சமயத்தில் வந்திருக்கப்படாது. ஆனால், பரவாயில்லை. உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். இந்த அம்மா தான் என்னோட சினிமாவிலே எல்லாப் படத்திலேயும் கதாநாயகி பார்ட் எடுத்து நடிக்கிறா. மோகனாபாய் என்று கேள்விப்பட்டிருப்பாயே. புருஷன் மனைவி என்று ஆகி விட்டா நடிக்கச் சௌகர்யம் என்று போன வருஷம்தான் ரிஜிஸ்டர் விவாகம் பண்ணிக் கொண்டு விட்டோம். பையனைப் படிக்க வச்சுக்கிட்டு நீ கஷ்டப்பட வேண்டாம். என்னோட அனுப்பிவிடு. அவனுக்கு இப்போ புடிச்சு பாட்டுக் கீட்டு சொல்லி வச்சு பெரிய நடிகனாக்கி விடறேன். உனக்கு ஏதாவது பணம் தந்துடறேன்'' என்றான் ஆறுமுகம்.

சின்னரங்கம் அவனை அலட்சியமாகப் பார்த்தாள். ''போதும் போதும். டிராமாவிலே போய்ச் சம்பாதித்ததும் என்னைக் கூட்டிப் போறேன் என்று சொல்லியதும், என் ஒரே மகனையும் என்கிட்ட இருந்து பிரிக்க வேண்டாம். உன் பணம் எனக்கு வேண்டாம் போ'' என்று கூக்குரலிட்டாள்.

அதுவரை சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு மருள மருள விழித்துக் கொண்டு மூலையில் நின்று கொண்டிருந்த பையனைப் பார்த்து ஆறுமுகம், ''நான்தான் உங்கப்பன். டே தம்பி, என்னோட வர உனக்கு இஷ்டமா? என்று கேட்டான்.

''மரியாதையா வெளியிலே போய்விடு என் ஆசையை மடிய வச்சு என்னை விட்டுவிட்டுப் போனது பத்தாதுன்னு



என் கண்ணான மகனையும் கூட்டிப் போகாதே. செத்துப் பூடுவேன்'' என்று ஹோவென்று அழ ஆரம்பித்தாள் சின்ன ரங்கம்.

''மாடு மேய்க்கட்டும் உன் மகன். நல்லதைச் சொன்னால் உனக்குப் புத்தியேது அறிஞ்சுக்க?'' என்று கத்திவிட்டு ஆறுமுகம் மோகனாபாயுடன் வெளியேறினான்.

இது நடந்து நாலைந்து நாள் கழித்து ஒரு நாள் தன் மகன் பள்ளிக்கூடம் போனவன் திரும்பி வரவில்லை. சின்னரங்கம் துடித்துப் போனாள். இராத் தூங்காமல் ஆறு, குளம் ஒன்று விடாமல் தேடினாள். காணவில்லை.

மறுநாள் அவளுக்கு ஒரு கார்டு வந்தது. அதை வாத்தியார் அய்யாவிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்டாள்.

''என் மகனை அழைத்துப் போக உரிமை எனக்கு உண்டு. நீ வீணாக அவனைப் பாழாக்குகிறாய். அதனால் அவனை என்னுடன் கூட்டிக் கொண்டு பட்டணம் போகிறேன். இப்பொழுது அவனை விட்டுப் பிரிகிறோம் என்று இருக்கும். பிறகு அவன் புகழைக் கேட்டுச் சந்தோஷப்படுவாய். உன் செலவிற்கு இத்துடன் ஐம்பது ரூபாய் அனுப்பியிருக் கிறேன்.''

கடிதத்தின் சாராம்சத்தையறிந்த சின்னரங்கம் அழவில்லை. இனிமேல் அவள் எதற்கு அழுவது? ''கடவுள் கொடுத்த இரண்டு கையிருக்கிறது. வலிவு இருக்கும்வரை உழைத்துச் சாப்பிடுவது. கவலைப்படுவதில்லை'' என்று தீர்மானித்து விட்டாள்.

இந்தக் கதையைக் கேட்ட நான் மிகவும் ஆச்சரியம் அடைந்தவளாய் ''என்ன இருந்தாலும் உனக்கு குழந்தை, கணவன் எல்லாரையும் பிரிந்த வருத்தம் இருக்கத்தான் இருக்கும் இல்லையா?'' என்றேன்.

''எதுக்கு அம்மா வருத்தப்படணும்? நாம் ஒருத்தரு மேலே ஆசைப்பட்டா, அவங்களுக்கு நம்ம மேலே ஆசை யில்லாட்டி நாம்ப அதுக்கு வருத்தப்பட்டுச் சாத்தியப்படுமா? அந்தப் பையனை அத்தனை கஷ்டப்பட்டு வளர்த்தேன். அவன் மேலே உசிராய் இருந்தேன். என் மேலே ஆசை இருந்தா அப்பன் கூடப் போயிருப்பானா? நம்மகிட்ட வந்து ஒட்டாத மனுசங்களைப் பிசின் வச்சு ஒட்ட முடியுமா? அவ்வளவுதான் நாம் கொடுத்து வச்சது என்று விட்டுடணும். அப்பதான் கவலையே இராதுங்க'' என்று கூறி விட்டுச் சிரித்துக் கொண்டு வேலை செய்யப் போய்விட்டாள்.

வாழ்க்கையில் பிராணனுக்குச் சமமான கணவனையும் பிள்ளையையும் இழந்தும் அவளுக்கிருந்த மனோதிடம் என்னை வெட்கும்படி செய்தது. 'கேவலம் ஒரு புடவைக்கு இப்படி மனம் இடிந்து போனேனே' என்று எண்ணி நானே சிரித்துக் கொண்டேன். அப்பொழுது என் சிநேகிதி மாலதி உள்ளே வந்தாள்.

''புடவை வாங்கினியா? நன்றாய் இருக்கிறதே இந்த சிலேட் கலர் கிடைக்கணும்னு நான் ஊரெல்லாம் தேடினேன். எனக்குக் கிடைக்கவில்லை. உனக்கு அதிர்ஷ்டம். நல்ல புடவையாய்க் கிடைத்து விட்டது'' என்று மேஜைமீது நான் வீசி எறிந்திருந்த புடவையை எடுத்துப் பார்த்து சந்தோஷப் பட்டாள்.

நான் பேசாமல் அசடு வழிய சிரித்தேன்.

★ ★ ★